


**13. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் இறுதி நாளான இன்று இரு அவைகளும் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன.

2. தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் முன்னிலையில் இன்று சென்னையில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்தாயின.

3. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்களை மீட்க வெளியுறவு அமைச்சகத்தின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு. ஸ்ரீநாத் தெரிவித்துள்ளார்.

4.. தமிழ்நாட்டில் MBBS., BDS மருத்துவ படிப்புகளுக்கான மாணாக்கர் கலந்தாய்வு இன்று தொடங்கியது.

5. சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கில் எட்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை தடகள ஓடுதளம் இன்று செயல்பாட்டிற்கு வந்தது.

இனி விரிவான செய்திகள்

************

நாடாளுமன்றம்

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் இறுதி நாளான இன்று இரு அவைகளும் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன.

முன்னதாக மக்களவை இன்று கூடியதும் நீட் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் அமளி காரணமாக மறு தேதி குறிப்பிடப்படாமல் அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா அவையை ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையில் சுரங்கங்கள் மற்றும் கனிம வளம் சட்ட திருத்த மசோதா 2026- இன்று நிறைவேறியது.

முதலீடுகளுக்கு உகந்த துறையாகவும், வளர்ந்து வரும் அரியவகை கனிம வளங்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் சுரங்கத்துறையை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த மசோதாவை மத்திய நிலக்கரி துறை அமைச்சர் திரு. ஜி. கிஷன் ரெட்டி இன்று அறிமுகம் செய்து வைத்தார்.

இந்தமசோதா தொடர்பான விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய அவர் கனிமவள மேலாண்மையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்து ஏல நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டதை அவர் எடுத்துரைத்தார்.

கடந்த 12 ஆண்டுகளில் நிலக்கரி உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும், கூடுதல் மின் உற்பத்தி நடைபெற்றிருப்பதாகவும் இதில் 73 சதவிகிதம் நிலக்கரி சார்ந்த

அனல் மின் ஆலைகளிலிருந்து கிடைக்கப்பெற்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிலக்கரி உற்பத்தி அதிகரித்திருப்பது நரேந்திரமோடி அரசின் ஆக்கப்பூர்வமான அணுகுமுறையை வெளிப்படுத்துவதாக அவர் கூறினார்.

இம்மசோதா நிறைவேறிய பின்னர் மாநிலங்களவையும் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

சென்ற மாதம் 20ஆம் தேதி மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கிய நிலையில் கடந்த 25 நாட்களில் 19 அமர்வுகள் இடம்பெற்றுள்ளன.

பொது தேர்வு முறைகேடுகள் தடுப்பு,

தேசிய கவுரவ அவமதிப்பு தடுப்பு

தீர்வாயங்கள் சீர்திருத்தங்கள்,

தேசிய கூட்டுறவு மேம்பாட்டு கழகம் உள்ளிட்ட சட்ட திருத்த மசோதாக்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேறின.

************

கிரண் ரிஜிஜூ.

இதனிடையே நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் 12 மசோதாக்கள் நிறைவேறியுள்ளதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதில் ஒரு மசோதா குறித்து மட்டுமே இரு அவைகளிலும் விவாதம் நடைபெற்றதாக தெரிவித்தார்.

மழைக்கால கூட்டத்தொடரை பொருத்தவரை மக்களவையின் செயல்பாடு 19 சதவிகிதமாகவும்

மாநிலங்களவையின் செயல்பாடு 39 சதவிகிதமாகவும் இருந்ததாக அவர் கூறினார்.

எதிர்கட்சிகளின் அமளியால் முதல்முறை நாடாளுமன்ற உறுப்பினர்களாக பொறுப்பேற்றவர்களுக்கு எந்த வாய்ப்பும் அனுபவமும் கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

************

குடியரசு தலைவர்

நாட்டின் வளமான நாட்டுப்புற கலை கலாச்சாரங்களை பாதுகாப்பதில் கலைஞர்கள் முக்கிய பங்காற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான சங்கீத நாடக அகாடமி விருதுகளை இன்று வழங்கி பேசிய அவர் நம் நாட்டின் இசை பல்வேறு வடிவங்களை கொண்டதாகும் என்று பெருமிதம் தெரிவித்தார்.

இந்த விருதுகள் அனைத்தும் தேசத்தின் வளமான கலாச்சாரத்தையும் பாரம்பரிய மரபுகளையும் பிரதிபலிப்பதாகும் என்று அவர் எடுத்துரைத்தார்.

************

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் முன்னிலையில் இன்று சென்னையில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்தாயின.

67 ஆயிரத்து 452 கோடி ரூபாய் முதலீட்டிலான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 998 பேர் வேலை வாய்ப்பை பெறுவர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழல் தமிழகத்தில் உள்ளதாக கூறினார்.

வேலை தேடி இளைஞர்கள் சொந்த ஊரை விட்டு செல்லக்கூடாது என்பதே அரசின் இலக்கு என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

************

கர்நாடக ஆர்பாட்டம்

காவிரியில் தண்ணீர் திறந்துவிட காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவிற்கு எதிர்ப்பு தெரிவித்து கர்நாடக மாநிலத்தில் கன்னட அமைப்புகள் இன்று அழைப்பு விடுத்திருந்த முழு அடைப்பு போராட்டம் விலக்கி கொள்ளப்படுவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. D K சிவகுமார் அறிவித்தார்.

இருப்பினும் ஒசூரில் அத்துமீறி நுழைய முயன்ற கன்னட அமைப்பினரை இருமாநில காவல்துறையினரும் அப்புறப்படுத்தியதாக எமது கிருஷ்ணகிரி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

மூவர்ண கொடி

நாட்டின் 80ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கத்தை முன்னெடுத்து செல்லும் வகையில் புதுதில்லியில் மூவர்ண தேசிய கொடி யாத்திரையை மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தொடங்கிவைத்தார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பிஜேபி சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. அரியலூர், திருநெல்வேலி மாவட்டங்களில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் தேசிய கொடியை ஏந்தியவாறு ஏராளமான பிஜேபி தொண்டர்கள் பங்கேற்றனர்.

வீடுகள் தோறும் தேசிய கொடி ஏற்றுமாறு அவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

************

ஸ்ரீநாத்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள ராமேஸ்வரம் மீனவர்களை மீட்க மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு.ஸ்ரீநாத் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டப்பேரவையில் மீனவர் மானிய

கோரிக்கையின்போது சாதகமான திட்டங்கள் அறிவிக்கப்படும் என்றார்.

ஆழ்கடல் மீன்பிடி அனுமதி தொடர்பான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக கச்ச தீவு தலைமன்னார் இடையே எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தை சேர்ந்த 9 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ததோடு ஒரு படகையும் பறிமுதல் செய்தனர்.

************

MBBS

தமிழ்நாட்டில் MBBS BDS மருத்துவ படிப்புகளுக்கான மாணாக்கர் கலந்தாய்வு இன்று தொடங்கியது.

சிறப்பு பிரிவினருக்கு நேரடியாகவும்,

பொது பிரிவினருக்கு இணைய வழியாகவும் இக்கலந்தாய்வு நடைபெறுகிறது.

வரும் 19ஆம் தேதி மாலை 5 மணிவரை தகுதியான மாணவர்கள் கல்லூரிகளை தேர்வு செய்யலாம்.

அவை பரிசீலனை செய்யப்பட்டு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான முடிவுகள் வரும் 21 ஆம் தேதி வெளியிடப்படும்.

************

ஆதவ் அர்ஜுனா

சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை தடகள ஓடுதளத்தை மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா இன்று திறந்துவைத்தார்.

சென்னை அரியலூர் திண்டுக்கல் தூத்துக்குடி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் 31 கோடி ரூபாய் மதிப்பிலான விளையாட்டு மேம்பாட்டு திட்டங்கள் கடந்த 3 மாதங்களில் தொடங்கப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளது.

ராமநாதபுரம் சேலம் கடலூர் மாவட்டங்களில் 38 கோடியே 24 லட்ச ரூபாய் மதிப்பில் இதுபோன்ற ஓடுதள பணிகள் நடைபெற்று வருகின்றன.

************

வேலை வாய்ப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை நடைபெறுகிறது.

இம்முகாமில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவில் ஆவணி மூலத்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.

************

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தை குப்பை இல்லா பெரம்பலூர் மாவட்டமாக மாற்றும் வகையில் தூய்மை பணிகளை ஆட்சித்தலைவர் திருமதி ஷரண்யா அறி தொடங்கிவைத்தார்.

பொதுமக்கள் அனைவரும் தத்தம் பகுதிகளை தூய்மையாக வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற 32ஆவது தேசிய மாங்கனி கண்காட்சியில் சிறந்த மாங்கனிகளாக மல்கோவா பங்கனபள்ளி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பரிசுகளை ஆட்சித்தலைவர் திரு.தினேஷ்குமார் விவசாயிகளுக்கு வழங்கினார்.

************

கோவில்

மயிலாடுதுறை சீர்காழி அருள்மிகு சட்டைநாதர் திருக்கோவில் ஆடிப்பூர உற்சவ தேரோட்டம் இன்று நடைபெற்றது.

திரளான பக்தர்கள் தேரை வடம்பிடித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

மேட்டூர்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80.31 அடியாக இன்று உயர்ந்துள்ளது.

அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 7 ஆயிரத்து 833 கன அடியாக குறைந்துள் நிலையில் குடிநீர் தேவைக்காக ஆயிரத்து 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

************

டென்னிஸ்

கஜகஸ்தான் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், சீனாவின் வாங் இணை - ஜப்பான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

************

ஹாக்கி

16ஆவது ஆடவர் மற்றும் மகளிருக்கான உலக கோப்பை ஹாக்கி போட்டிகள் பெல்ஜியம் மற்றும் நெதர்நலாந்தில் நாளை மறுநாள் தொடங்குகின்றன.

இந்திய ஆடவர் அணி தனது முதல் போட்டியில் நாளை மறுநாள் ஆம்ஸ்டல்வீனில் வேல்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

மகளிர் பிரிவில் இந்தியா – சீனாவுடன் வரும் ஞாயிற்றுக்கிழமை மோதுகிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது